


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக செயல்படுத்தி வரும் அரசின் திட்டங்கள் குறித்து, கிராமப்புறங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், தெருக் கூத்து மற்றும் நாடகக் கலை நிகழ்ச்சிகளை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (28.02.2017) துவக்கி வைத்தார்.

செ.வெ.எண்: 147/2017 நாள்: 28.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (28.02.2017) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக செயல்படுத்தி வரும் அரசின் திட்டங்கள் குறித்து, கிராமப்புறங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், தெருக் கூத்து மற்றும் நாடகக் கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (28.02.2017) துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

பின்னர், ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ. 5,300/- மதிப்பிலான சக்கர நாற்காலியும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ. 4,200/- மதிப்பிலான செயற்கை அவயமும், 18 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய 11 மாற்றுத்திறனாளிகளுக்கு பாதுகாவலர் சான்றுகளும் என மொத்தம் ரூ. 9,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை இன்று (28.02.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. பிரம்மநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.